# ஞாலகுருவின் படைப்புக்கள்

# இந்துமதத்துக்குரிய இந்தியாவில் அருளாட்சியை அமைக்க வேண்டும்!

ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.**
**(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)**

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,121 சித்திரை மாதம்.**

## இந்து இலக்கியக் கழக வெளியீடு

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. **"இந்துமதத்திற்குரிய இந்தியாவில் அருளாட்சியை அமைக்க வேண்டும்"** - குருதேவர் தமது குருவாணை ஓலைநாயகம் மூலம் 24/01/1986இல் அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் அவர்களுக்கு எழுதிய நெடிய அஞ்சல்.

2. **"சேருபவர்களும் விலகுகிறவர்களும் இருப்பதுதான் இயக்கம்"** - குருதேவர் தமது மாணாக்கர் அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் அவர்களுக்கு 29/01/1986இல் எழுதிய அவசர அவசிய விளக்க அஞ்சல்.

3. **"நாம் எதையுமே விமர்சிக்கத் தயங்கக் கூடாது"** - குருதேவர் அவர்கள் தமது குருவாணை ஓலைநாயகம் மூலம் மதுரைச் சித்தரடியான் திரு வெ.செகதீசன் அவர்களுக்கு 30/01/1986இல் வழங்கிய கருத்து விளக்க அஞ்சல்.

4. **"கருகுலம் அமைவது பற்றிய அஞ்சல்"** - அனைத்து அடியான்களுக்கும் குருதேவர் அவர்கள் காரணேடையில் கருகுலத்திற்கான இடம் வாங்கியது பற்றியும் அதன் துவக்க விழா பற்றியும் 27/02/1986இல் விடுத்த அஞ்சல்.

# இந்துமதத்துக்குரிய இந்தியாவில் அருளாட்சியை அமைக்க வேண்டும்!

பொன்னேரி,
24.1.1986.

பேரன்புள்ள இனிய பரமாச்சாரியார் அவர்களுக்கு கவிக்குமார் வரையும் மடல்.

1) நலம். நலமறிய ஆவல்.

2) தங்களின் DRR.No.120/1315 dt.20/1/86ஆம் தேதிய கடிதம் கண்டேன். அதில், "...வளர்த்து வளர்த்து வெட்டுவதை விட வளர்க்காமலேயே இருந்து விட்டால் என்னவென்று தோன்றுகிறது...". இந்த சிந்தை வெந்த, மனம் நொந்த வரிகள் நமது தலைமைச் செயலாளர் இன்னும் பச்சைக் குழந்தையாகவே இருக்கின்றார் என்பதையே காட்டுகின்றது. வருந்த வேண்டாம். துரோகங்களையும், விரோதங்களையும் கண்டு வருந்த வேண்டாம். சில ஆயிரம் ஆண்டுகளாக வீழ்த்தப்பட்ட நிலையிலேயே, தாழ்த்தப்பட்ட நிலையிலேயே சிதைந்தும், சீரழிந்தும், நலிந்தும், மெலிந்தும், நோயுற்றும், பேயுற்றும் கிடக்கின்ற நமது தாயகத்து மக்களைக் காணுங்கள். உங்களுக்கு மனத் தளர்ச்சியோ, பிறர் மீது வருத்தமோ ஏற்படவே ஏற்படாது. நிதானமாகச் சிந்தியுங்கள்.

3) அருட்கொடை வள்ளல் அருளாட்சிக்குப் புறப்பட்டிருக்கின்றார் என்கின்ற போது, அருளை வேண்டி வருகின்றவர்களின் தரத்தையும், திறத்தையும் ஆராய முடியுமா? அருளை வாங்கிச் செல்ல நிறையப்பேர்

வந்து கொண்டே இருந்தால் போதும் என்ற நோக்கில்தான் செயல்படுகின்றோம் நாம். அனைத்து வகையான தாகங்களையும், பசிகளையும், பிணிகளையும் போக்கக் கூடிய அருளைப் பெற்றுச் செல்பவர்கள்; அதை வழிநெடுக ஒழுக விட்டாலும் சரி, அல்லது வழியிலேயே விட்டுவிட்டாலும் சரி, அல்லது தாங்கள் உண்ணுமல் பிறரிடம் தந்து விட்டுச் சென்றாலும் சரி ... உரிய பயன் விளைந்தே தீரும்.

அதாவது, நாம் ஓர் இயக்கமாகத் (Movement) தொடர்ந்து வளர்ந்து கொண்டே போக விரும்புகின்றோம். இதற்காக நம்மை அறிமுகப்படுத்துபவர்கள் தேவை. இவர்கள் நம்மை எப்படி அறிமுகப் படுத்தினாலும் சரி, கவலையில்லை. ஏனெனில், நாம் மிகத் தெளிவாக, எளிமையாக, நேரடியாக ... எவரும் தெரிந்து புரிந்து கொள்ளும் வண்ணம் நமது வரலாறு, தத்துவம், சித்தாந்தம், செயல்நிலைகள், அலுவல் முறைகள், குறிக்கோள்கள், கொள்கைகள், ... முதலியவற்றை ஊன்றுகளுடனும், சான்றுகளுடனும்; அச்சிட்ட பிறதிகளாகவும், கையெழுத்துப் பிறதிகளாகவும், பேச்சுரைகளாகவும், சொற்பொழிவுகளாகவும், ... வழங்குகின்றோம். இவற்றிற்கெல்லாம் மேலாக நாம் நம்மிடம் வருகின்றவர்களையெல்லாம் அருளுலக அநுபவம் பெற்றிடுமாறு செய்கின்றோம். அம்மட்டின்றி அவர்களே பிறருக்கு அருளை வழங்குவதற்குரிய அருட்பயிற்சிகளையும் வழங்குகின்றோம். இவற்றிற்காக நாமே சுடுகாடுகளிலும், வெட்டவெளிகளிலும், ஏற்கனவே உள்ள கோயில்களிலும் அமுதத் தமிழில் மந்திறங்களைச் சொல்லிப் பூசைகள் செய்கின்றோம்.

4) அருமை நண்ப! குயவன் மண்ணை நம்பித்தான் வாழ்கிறான். அவன் பானைகளைத் தயாரிப்பதற்காகத் தட்டும் போதும், கொட்டும் போதும், பச்சை மண்ணை வடிக்கும் போதும் உடைந்து போகின்றவைகள் நிறைய. சந்தைக்கு எடுத்துச் செல்லும் போதும், விற்கும் போதும் உடைகின்றவைகள் நிறைய. ஆனால், குயவன்

உடைகின்ற பாண்டங்கள் அனைத்துக்கும் சேர்த்துத்தான் இருப்பவைகளுக்கு விலை வைத்து விற்கின்றான். *'பானை உடைந்து விடுமே'* என்று எண்ணினால் அவனால் பானையே செய்ய முடியாது. அவனும் வாழ முடியாது!

அதேபோல்தான், தத்துவம், கொள்கை இவைகளை வைத்து ஒரு மாபெரும் இயக்கத்தைத் துவக்கியுள்ளோம். இந்த உலைக்களத்தில் எண்ணற்றவர்களைத் தயாரிக்கின்றோம். பலர் தயாரிக்கும் போதே உடைகின்றனர். விலகுகின்றனர். பலர் சந்தைக்கு வந்த பின்னரே நொறுங்குகின்றனர். அதாவது துரோகிகளாகின்றனர். சிலர் மக்களால் தட்டும் போதும், தொட்டுப் பார்க்கும் போதும் உடைகின்றனர். அதாவது, பேராசை, அகம்பாவம்..... முதலியவற்றால் தனியாக இயங்க ஆரம்பித்திடுகின்றார்கள். ந.செயராமனும், வஞ்சிப்பட்டி இரவீந்திரனும் இவர்களைச் சேர்ந்தவர்களாதலால் அவர்கள் வீணாகிப் போனதாகக் கருத வேண்டாம். அவர்கள் உடைந்து தூள் தூளாகிப் போனாலும் இவர்களை உருவாக்கிய குயவனின் ஊரையும் பெயரையும் உலகுக்கு நினைவுபடுத்துபவர்களாகவும், எடுத்துக் கூறுபவர்களாகவும்தான் இருந்திடுவார்கள். எனவே, அவசரப்பட்டு நம்மை விட்டு விலகிச் செல்கின்றவர்கள் மீது எந்தவித விமர்சனங்களையும் வழங்க வேண்டாம். எங்கிருந்தாலும் அவர்கள் நம்மவர்களே.

5) சித்தர்நெறியில் உள்ளவர்களுக்கு ஊழ்வினை, விதி, முற்பிறப்பு, மறுபிறப்பு என்பனவற்றின் அடிப்படையில்தான் மனித வாழ்க்கை அமைகின்றது. ஆனால், ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கக் கூடிய ஆள்வினை, சூழ்வினை, கல்வித் தேர்ச்சி, பயிற்சி, முயற்சி, ... என்பவைதான் அவனுடைய இந்தப் பிறப்பின் வாழ்வுக்குப் பொறுப்பாகின்றன. அதாவது, ஒருவனுடைய ஆணவம், அகம்பாவம், குரு துரோகம், ... முதலியவைதான் அவனுடைய வெற்றி, தோல்வி, இன்பம், துன்பம், அமைதி, நிம்மதி என்ற ஆறையும் விழுங்குகின்றன. இதன்படிப் பார்த்தால் நம்மை விட்டுச் சிலர் பிரிந்து சென்றது

நம்முடைய தோல்வியால் அல்ல. அது அவர்களுடைய தோல்விதான். அதாவது ஒருவன் ஒரு நொடிப்பொழுதாவது சித்தரடியானுக வாழ்ந்து சென்றிடுவானேயானுல்; அவன் நமது வரலாற்றுக்குச் சான்றுகவும், ஊன்றுகவும் இருந்திடுவான். இதனை முழுமையாக நினைத்துப் பாருங்கள்.

6) நண்ப! மண்ணுக்குள் புதைந்து கிடக்கும் சிலைகளும், உடைந்து கிடக்கின்ற கல்வெட்டுக்களும்தான் மதிப்பிடற்கரிய மதிப்பினைப் பெறுகின்றன. இதைப் போலத்தான் நாம் உருவாக்கிட முற்படும் பேராலயங்களின் சிதைவுகளாக நம்மை விட்டுப் பிரிந்து போகின்ற இவர்கள்தான் நமக்குப் புகழ் சேர்ப்பவர்கள். எனவே, நம்மைப் பற்றித் தூற்றுபவர்களுக்கும், போற்றுபவர்களுக்கும் நன்றி கூறி நமது பணியைத் துவக்குங்கள். அதாவது, நம்மை விட்டுச் செல்பவர்களுக்காக அதிகம் வருந்தாமலும், நம்மை நாடி வருபவர்களைக் கண்டு அதிகம் மகிழாமலும் இருந்திடப் பழகிக் கொள்ளுங்கள்.

7) ஊழ்வினையின் காரணமாகக் கோவலனும் மாதவியும் சேர்ந்தது போல் J.P.பட்டேல் சேட்டும், இராசாத்தியும் சேர்ந்துள்ளனர். இப்பேருண்மையினைத் தாங்களாவது முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும். பிறகு, பிறருக்குப் புரியவைக்க வேண்டும். இவர்கள் இருவரையும் சிறந்த அருளாளர்களாக மதித்து ஏற்றுப் போற்றுங்கள். இவர்களுடைய நட்புக்கும், தோழமைக்கும் சோதனைகள் வந்தால் அவற்றை **உலகியலாகச் சந்தித்து** வென்றிட வேண்டியவர்கள் இவர்களேயாகும். இக்கருத்திற்கு இந்த அஞ்சலையே சான்றுக ஊன்றுகக் காட்டியே இவர்களுக்கும், நம்மவர்களுக்கும் உள்ள மெய்ஞ்ஞான நிலையை விளக்கிடுங்கள். மற்ற விவரங்களை உரிய மனப்பக்குவம் உள்ளவர்களிடம் நேரில்தான் விளக்க முடியும். மற்றவர்களுக்கு விளக்க முடியாது, விளக்கக் கூடாது. இவர்கள் நிலைத்து இணைந்து இருப்பதும், பிரிந்து போவதும் இவர்களுடைய செயல்களே யன்றி அருளுலகச் செயல்கள் அல்ல! (அருளுலகத்தார் இவர்கள் இணைந்து செயல்படவே வாழ்த்துகிறுர்கள்.)

8) நண்ப! அருளுலக அறியாமைகளையும், புரியாமைகளையும், கண்மூடித்தனமான வெறுப்புகளையும், மறுப்புகளையும், எதிர்ப்புகளையும் முழுமூச்சாக முறையோடு வென்றிடுவதற்கு அருளே அநுபவப் பொருளாக வழங்கிட வீரத்தளபதிகள் தேவை! சுடாலின் சரோசினி முழுநேர ஊழியர்களாகத் தமிழகம் முழுவதும் செல்ல அனுமதிக்கப்பட்டது போல, அருட்செல்வர்களான J.P.பட்டேலும், இராசாத்தியும் சன்னிதான உடையில் மெய்ஞ்ஞானக் கொடியேந்தி அருட்போரைத் தொடர்ந்து நிகழ்த்தும் வீரத் தளபதிகள் இருவராக நியமிக்கப் படுகின்றார்கள்.

9) சேட்டிடம் பொருள் வசதி இருப்பதால், அவர் தங்களையோ அல்லது தங்களின் ஒப்புதல் பெற்ற ஒருவரையோ துணைக்கழைத்துக் கொண்டு அரியலூர் வட்டம், முசிறி வட்டம், திருவையாறு, களிமேடு, திருவாரூர், திருச்சி நகரம், கோவை, வேம்படிதாளம், (இவர்கள் உடனடியாக வேம்படிதாளம் சென்று அ.வி.தி. பணி செய்க. தங்களின் ஆணைப்படி செயல்படட்டும். இது பற்றி சீ.மணிக்கு அறிவிக்க) நெல்லை, குமரி மாவட்டங்கள், ... முதலிய இடங்களில் முழுமையாக சுற்றுப்பயணம் செய்து மந்திரிக்க ரூ.1/-, முடிகயிறு ரூ.3/-, தாயத்துக்கு ரூ.5/-, தகடுக்கு ரூ.11/-, அருட்கணிப்பு ரூ.25/-, முழுமையான அருட்கணிப்புக்கு (சாதகம், கைரேகை, வீட்டுமண் இவர்களுடைய அருட்கணிப்பு நகல் இவற்றோடு) ரூ.48/- பெற்று; ஒவ்வொரு வாரமும் தங்களிடம் அருள் பெற்றவரின் முழுவிவரமும், தாங்கள் சொல்லிய அருட்கணிப்புப் பற்றிய முழுநகலும், வசூலான தொகை முழுவதும், குருதேவர் ஆண்டுச் சந்தாவுக்காக வாங்கக் கூடிய தொகை ரூ.20/-உம், முகவரியும்; எங்கிருந்தாலும் வாராவாரம் குருதேவரின் பெயருக்கு குருதேவரின் இல்லத்திற்கு அனுப்ப வேண்டும். **இது குருவாணை**.

**சேட்டை** ஆயிரங்கைக் காளி பீடத்தில் நிறுத்தி வைத்து; அஞதிசங்கராச்சாரியார் பீடாதிபதி, தஞ்சைப் பங்காரு காமாட்சியம்மன்

சன்னிதானம், தஞ்சைப் பெரியவாள், கடவுளாச்சாரியார், தஞ்சை காமகோடி பீடாதிபதி என்று அருட்பட்டங்கள் வழங்கி சன்னிதான உடையில் அருட்பணியாற்ற அனுமதியுங்கள். (4 முழம், 6 முழம், தலையில் 16 முழம் அணியட்டும்). இதேபோல், **இராசாத்தியை** பழையனூர் நீலி பீடத்தில் நிறுத்தி திருச்சி சோமகோடிப் பீடாதிபதி, பழையனூர் நீலி சன்னிதானம், திருச்சி பெரியவாள், தெய்வீகாச்சாரியார் **சித்தரடியார் இராசாத்தி அம்மையார்** என்று அருட்பட்டங்களை வழங்கிக் குருதி வண்ணச் சிவப்பாடையில் செயல்பட அனுமதியுங்கள்.

ஒரு வாரம் ஞாயிறன்று குருகுலத்திலும், செவ்வாய் அல்லது புதனன்று தத்தனேரியிலும், வெள்ளியன்று மதுரை மீனாட்சியம்மன் கோவிலிலும் வாழ்த்துதல் பெற்றுச் செயல்படக் கூறுங்கள். இப்படி முடியவில்லை என்றாலும் கவலைப்பட வேண்டாம். இவ்விருவரையும் செயல்பட அனுமதியுங்கள். இவர்கள் இருக்கின்ற இடத்தில் இவர்களுடைய கணிப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இவர்களை அருளாளர்களாக அனைவரும் மதித்துப் போற்ற வேண்டும். இவர்களை நாம் இழந்து விடக் கூடாது. இவர்களின் கைகளில் ஏந்திடும் மெய்ஞ்ஞானக் கொடியும், மயில்பீலியும்தான் பெருமழை போல் நமது பணி எங்கும் பரவிட வழி வகுக்கும்.

சுடலைச் சன்னிதானம் பெரி.முத்தையா உடல்நலம் இல்லாமல் இருப்பதால் இந்த இரண்டு புதிய சேனைத் தளபதிகள் (பட்டேல்/ இராசாத்தி) இருவரையும் நமக்குத் துணையாக வைத்துக் கொண்டு உடனடியாகக் கம்பம், கூடலூர், ... வட்டாரங்களில் பயணம் செய்யட்டும். முடிந்தால் சோழவந்தான், தேவதானப்பட்டி, வத்தலக்குண்டு, ... சென்று வரட்டும். மிகப்பெரிய பயிற்சி கிடைத்தது போலிருக்கும். இப்பயணத்தில் பங்கு பெறுமாறு M.C.இராமன், செகதீசன், A.இராமர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கக் கூறுங்கள். யார் வந்தாலும் அழைத்துச் செல்லக் கூறுங்கள். தாங்களும் இரவீந்திரனும் கோவை/

முசிறி செல்வதால் நீங்கள் சென்று வந்த பிறகு சேட்டையும், இராசாத்தியையும் அங்கு அனுப்புங்கள்.

இதேபோல் சுடாலின் சரோசினியும்; அவர்கள் சென்று வந்த இடங்களுக்கு இவர்களை அனுப்புங்கள். இந்த இரண்டு இணையையும் மாற்றி மாற்றிச் செயல்படுத்துங்கள். தாங்கள் கூறியபடி குருதேவர் பிப்ரவரி மாதக் கடைசி வாரத்திற்குள் இந்த இரண்டு இணைகளும் நெல்லை, குமரி மாவட்டங்களையும் சுற்றியே ஆக வேண்டும். **குருவாணை**. எனவே, மின்னல் வேகத்தில் இது நிகழட்டும்.

10) தமிழகம் முழுவதும் தோற்றத்திலாவது நம்மையும், நமது இயக்கங்களையும், செயல்நிலைகளையும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே! நமது அ.வி.தி. செயல்வீரர்கள் சன்னிதான உடைகளிலும், இ.ம.இ. கொள்கை விளக்க முழக்கப் பேச்சாளர்கள் கருஞ்சட்டையிலும் சுற்றிவர வேண்டும் எனச் செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

<u>**செயல்திட்டம்:-**</u> நமக்கு ஒலிபெருக்கியோடு பொதுமேடைகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! <u>மக்கள் கூடுகின்ற பொதுவிடங்களிலும், கோயில்களிலும், தெருமுனைகளிலும், அங்காடிகளிலும், சந்தைகளிலும் நம்மவர்கள் நின்று நம்மிடமுள்ள அச்சிட்ட பழைய அறிக்கைகளையும், அறிவிக்கைகளையும் வழங்கித் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு நமது கொள்கைகளையும், குறிக்கோள்களையும் உரத்த குரலில் உரைக்க வேண்டும்</u>. அருளூறுப் பூசனைப் பொருட்கள், முடிகயிறு, தாயத்து முதலியவைகளைக் கொடுத்து **மெய்யான இந்துமத**த்தின் அருளாற்றலால் நோய்களையும், பேய்களையும் நலப்படுத்த வேண்டும்.

இதேபோல் வழிபாட்டு நிலையக் கருவறைகளிலும் சுகம் கண்டு கொண்டிருக்கின்ற கருவறைத் தெய்வங்களை அருளாட்சி அமைப்புப் பணிக்குத் தட்டியெழுப்பிக் கிளர்ந்தெழுந்திடச் செய்ய வேண்டும்.

சுடுகாடுகளிலும், இடுகாடுகளிலும், அருளாட்சி நாயகத்தின் வருகையை அறிவித்து மந்திரவாதிகளின் தீய ஆட்சிக்குத் தடைவிதிக்க வேண்டும். மந்திரவாதிகளுக்குரிய எதிர்ப்பு, மறுப்பு இயக்கத்தை வளப்படுத்த வேண்டும். அப்போதுதான், நாடெங்கும் உள்ள பூசாறிகள், குறிகாரர்கள், சித்து விளையாடல்காரர்கள், தவசிகள், ... முதலியோர்களுக்கு எல்லாம் பத்தியில் செழுச்சியும், சத்தியில் கிளர்ச்சியும், சித்தியில் வளர்ச்சியும், முத்தியில் மலர்ச்சியும் இருக்க முடியும்! இருக்க முடியும்! இருக்க முடியும்!

மொழியுணர்வு, இனவுணர்வு, நாட்டுணர்வு, பொதுவுடமைச் சித்தாந்தம், உலக ஆன்மநேய ஒருமைப்பாடு, கூட்டமைப்புச் சமுதாயம், மொழி விடுதலை, இன விடுதலை, பண்பாட்டு விடுதலை, பொருளாதார ஏற்றத் தாழ்வற்ற அரசியல் நிலை, ... முதலியவை பற்றிய கருத்து விளக்கங்களைப் புரிந்தவர்களாக்கி ஒன்றுதிரட்டி அருட்படை அமைக்க வேண்டும். அருட்போர் முதலில் தமிழகத்தில் மட்டும் நிகழ்ந்தாலும்; அது விரைவில் தென்னிந்தியா, இந்தியாவெனப் பரவி; முதல்கட்டமாக **இந்துமதத்துக்குரிய இந்தியாவில் அருளாட்சியை அமைக்க வேண்டும்.** அதற்கேற்ப அருட்போர் உருவாக்க வேண்டும். அதன்பிறகே உலகம் முழுவதும் அருளாட்சியை விரிவுபடுத்தி அருட்பேரரசு அமைக்க முடியும்.

இம் மாபெரும் செயல்திட்டத்திற்காகவே '*சிறுதுரும்பும் பல்குத்த உதவும்*' என்ற மூதுரைக்கு ஏற்ப யாராக இருந்தாலும் தயாராகிற வரை தயாராகட்டும் என்றே அருளுலகப் பயிற்சிகளை வழங்குகின்றார் குருதேவர். இதனைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக. ஒவ்வொரு சொல்லும் செயலும் அருளாட்சி அமைப்புப் பணிக்குரியதாக அமைய வேண்டும்.

11) நண்ப! அளப்பரிய, எல்லையற்ற தன்னம்பிக்கை உடையவர்களால்தான் அருளுலகில் தவறான கற்பனைகளோ, அவசரமான சமாதுநிலைகளோ, முறையற்ற தனிமைத் தவங்களோ,

முடிவில்லாத தயக்க மயக்கக் கலக்கக் குழப்பநிலைகளோ இல்லாமல் தொடர்ந்து விழிப்புணர்வோடு - ஒருவரின் அதாவது தன்னம்பிக்கையின் அளவுக்கேற்பவே - செயல்பட முடியும் என்ற கருத்துத்தான் குருபாரம்பரியத்தின் ஆரம்பமாகவும், உள்ளீடாகவும், முடிவாகவும் இருக்கின்றது. அதாவது, **'தன்னம்பிக்கை யில்லாதவன் தன்னையும் அறிய முடியாது! தலைவனையும் அறிய முடியாது! ஏனெனில் தன்னை அறிந்தவனே தலைவனை அறிவான்! தலைவனை அறிந்தவனே தன்னை அறிவான்'** என்பதுதான் இந்துமதத்தின் தாய்மைத் தத்துவம்; வாய்மைச் சித்தாந்தம். ஏனெனில், நமது சொல்லும், செயலுமே அருட்போரின் ஆயுதச் சாலைகளை நிரப்பும் ஆயுதங்களை உருவாக்கும் உலைக்களங்கள்.

இப்பேருண்மைகளைத் தாங்களும் நம்மவர்களும் செல்லுகின்ற இடங்களில் எல்லாம் பிறரோடு விவாதித்தும், தமக்குள் தாமே தத்துவ விசாரணையில் இறங்கியும் வளர்க்க வேண்டும். அப்போதுதான் **"தன்னம்பிக்கை யென்னும் ஆலமரம் எண்ணற்ற விழுதுகளையும், கணக்கற்ற கிளைகளையும் நொடிக்கு நொடி வளரப் பெற்றுத் தேவையான உறுதிநிலையை அடைந்திடும்"**. இப்படி நாம் தன்னம்பிக்கைக்கு முதலிடம் தருவதற்குக் காரணம் **[தன்னம்பிக்கையினால்தான்] சிந்தைத் தெளிவும், மன உறுதியும், செயல் ஒழுங்குக் கட்டுப்பாடும் விளைந்திடும்! விளைந்திடும்!! விளைந்திடும்!!! இந்த விளைச்சலை உடையவர்களே அருட்போரில் மாவீரர்களாகவும், பெரிய தளபதிகளாகவும், அருளாட்சி மண்டல நாயகங்களாகவும் விளங்கிட முடியும்! முடியும்!! முடியும்!!! எனவே, குருபாரம்பரியப்படி நமது ஒவ்வொரு சொல்லும் செயலுமே உலைக்களமாக இருக்கின்றன என்பதை நம்பிச் செயல்படுங்கள்.**

நாம் மெதுவாக வளர்ந்தாலும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளின் வலிவோடும், கோட்பாடுகளின் வளத்தோடும் ஆழமாக, அழுத்தமாக வளர்க்கின்றோம் என்பதை உணர்ந்து உணர்ந்து! நினைந்து நினைந்து! உரையாடி உரையாடி! வளர வேண்டியது நமது கடமை! கடமை!!

கடமை!!! நமது வளர்ச்சி ஆழமாகச் சென்றிட்ட வேர்களுடன் கூடிய மரம் போன்றதேயாகும்.

12) நண்ப! இதுவரை இம் மண்ணுலகில் தோன்றிய எந்தக் கட்சியோ, கழகமோ, சபையோ, இயக்கமோ, மன்றமோ, மதமோ, தத்துவமோ, சித்தாந்தமோ, அரசோ, ... தன்னுடைய **கொள்கை விளக்கமாகச் சிலநூறு விதிகளைக் கூடக் கூறவில்லை.** ஆனால், நாம் பலநூறு பக்கங்களை (சுமார் 350 பக்கங்களில்) நமது (24 அறிக்கை) குருதேவர் அறிக்கைகளிலும், ஆண்டு மலர்களிலும், பத்துக்கும் (10) மேற்பட்ட சிறிய புத்தகங்களிலும் மிகத் தெளிவாக எடுத்துரைத்து அச்சிட்டு வெளியிட்டுள்ளோம். **இதுவரை** வெளிவந்துள்ளவற்றை மட்டும் தொகுதியாக்கி (Binding) உண்மையான அறிவுடைய எவரிடம் தந்தாலும்; அவர்கள் இவற்றைப் படித்து முடித்த உடனேயே இந்தக் கொள்கைதான் உடனடியாக தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும், உலகுக்கும் தேவை! தேவை!! தேவை!!! என்று கூறிடுவார்கள்.

அதுமட்டுமல்ல, இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்ற ஒரே ஓர் இயக்கம்தான் தமிழர்களுக்குத் தன்மான உணர்வையும், இன உணர்வையும், மொழி உணர்வையும், நாட்டு உணர்வையும், பண்பாட்டு உணர்வையும், ... விழிச்சியும், எழிச்சியும், செழிச்சியும் அடையச் செய்திடும். அந்த மலர்ச்சியின் மூலமே தமிழினத்துக்குப் புதியதோர் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உருவாக்கித் தரும், உருவாக்கித் தர முடியும்.

எனவே, நம்மிடையே வாழ்ந்து சிறிய காலம் அனுபவம் பெற்றுப் பின் விலகி வெளியேறிச் செல்பவர்கள் ஆனாலும் சரி, அவர்களும் இந்து மத மலர்ச்சி வளர்ச்சிக்காகவும், விழிச்சி செழிச்சிக்காகவும் தமிழினத்தைத் தட்டியெழுப்பி, ஒற்றுமைப்படுத்தி, ஒருங்கு காட்டிடுவதற்காகவும் பயன்பட்டிடுவார்கள். எனவே, நாம் நம்மிடமுள்ள கையெழுத்துப் பிறதிகளையும், அச்சிட்டவைகளையும், பயிற்சி பெற்றவர்களையும் பயன்படுத்தி அருட்படை திரட்டியேயாக

வேண்டும். பாடிவீடுகளையும், போர்த்தளவாடங்களையும் நாடெங்கும் பரவலாக அமைத்திட வேண்டும். இவையே, இன்றைய நமது செயல்நிலைகள். இந்தச் செயல்நிலைகளை நிலைகுலையச் செய்யும் கவலைகளை வளர்த்துக் கொள்ளாதீர்கள். தொடர்ந்து துணிவோடும், பணிவோடும், கனிவோடும் தொண்டாற்றுங்கள். எதற்காகவும் கவலைப்படவே கூடாது! கூடாது!! கூடாது!!! கூடவே கூடாது!!!!

13) நண்ப! வெற்றி நமதே. நாளை நமதே! நமக்குத் தலைவர்களாக தாத்தாக்களும் ஆத்தாக்களும் உள்ளார்கள். நமக்குத் துணைவர்களாக அம்மையப்பன்கள் நம்முடன்தான் இருக்கின்றார்கள். அஞ்சவே வேண்டாம். அருளுலகத்தின் அனைத்துவிதமான உருவ அருவ அருவுருவங்களே நம்முடைய போர்த் தளவாடங்களாகவும், தளபதிகளாகவும் இருக்கின்றார்கள். இவற்றைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக. பல நகல்கள் அனைவருக்கும் அனுப்புக. பூசையில் இம்மலரைப் படித்துக் காட்டவும். குருதேவருக்குப் பேனா நகல்களும், 1+2=3 கார்பன் நகல்களும் அனுப்புக.

**அன்பு**
**சி.கவிக்குமார் B.Sc.,**
**25/1/86.**

<u>நகல் எடுத்தவர்</u>:-

அருள்மிகு தில்லைப் பொன்மன்றில் ஆடுகின்ற கூத்தர்ப் பெருமான் சன்னிதானம் ஏ.இரவி B.Sc.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் கிடைத்தது.//**

# சேருபவர்களும் விலகுகிறவர்களும் இருப்பதுதான் இயக்கம்

பொன்னேரி,
29.1.1986.

இந்து மறுமலர்ச்சி இயக்கத் தலைவர், குருதேவர் தனது தலைமைச் செயலாளர் நெ.சேவுகன் அவர்களுக்கு விடுக்கும் அவசர அவசிய மடல்.

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே.

2) நம்மவர்கள் யாராகயிருந்தாலும் **'அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. அனைத்துக்கும் அம்மையப்பன் துணையே!'** என்ற சித்தர்நெறித் தத்துவத்தில் நம்பிக்கை உடையவர்களாக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் தன்னம்பிக்கையோடும், கொள்கைப் பிடிப்போடும் செயல்படுபவர்களாக இருக்க முடியும். இப்படி இல்லாமல் வேரில்லாத பாசிபோல் தன்னம்பிக்கை யில்லாமல் இருப்பவர்களே! சிறுசிறு சலசலப்புக்கள் ஏற்படும் போதெல்லாம் மிகமிகப் பெரிய உணர்வுப் பாதிப்புக்களையும், செயல் பாதிப்புக்களையும் அடைந்து விடுகின்றார்கள். இதைத் தடுக்க ஒரே ஒரு வழி ஒவ்வொருவரும் அன்றாடம் இதுவரை வழங்கப்பட்டுள்ள மந்திரங்களைக் கூறியும், பூசைமுறைகளைக் கடைப்பிடித்தும் அன்றாடம் அருளைத் தங்களுக்குள் ஊற்றெடுக்கச் செய்து கொள்ள வேண்டும். இத்துடன், இதுவரை வெளிவந்துள்ள நமது புத்தகங்களையும், குருதேவர் அறிக்கைகளையும் கிறித்துவர் **திருபைபிளைப்** படிப்பது போல்; முகம்மதியர்கள்

**திருக்குரானைப்** படிப்பது போல் ஒரு மாதத்துக்கொரு முறை படித்து முடிக்க வேண்டும்.

3) அன்புகூர்ந்து நம்மவர்கள் அனைவரும் தாங்கள் **குருதேவரின் பதிலிகளாக, இ.ம.இ.யின் பொறுப்புள்ள தலைவர்களாக, அ.வி.தி.யின் செயல்வீரர்களாக, அருட்சேனையின் வீரத் தளபதிகளாகத்தான் உருவாக்கப் பட்டிருக்கிறார்கள்** என்ற பேருண்மையை உணர்ந்தும், நம்பியும் செயல்பட்டாக வேண்டும். அப்போதுதான் பல்வேறு வகையான அறவழிப் புரட்சிகளும், போர்களும் நிகழ்த்தக் கூடிய கட்டமைப்பும், கட்டுக்கோப்பும், சட்டதிட்டப் பிடிப்பும், நிறுவன நிர்வாக ஒழுங்கமைப்பும் உடைய ஒரு மாபெரும் இயக்கத்தை நம்மால் உருவாக்க முடியும். எனவே, தாங்கள் ஓர் இயக்கமாக வளருகின்ற நம்மிடையே வந்து சேருகின்றவர்களும், விலகிச் செல்பவர்களும் தொடர்ந்து இருக்கத்தான் செய்வார்கள். பிறர் நம்மைக் குறைகூறும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து இருக்கத்தான் செய்யும். இதற்காக வருத்தப்பட்டோ, மனம்நொந்தோ கலங்கினால் தங்களால் எதையும் சாதிக்க இயலாமல் போய்விடும் என்பதை இனிமேலாவது உணர வேண்டும். **சேருபவர்களும் விலகுகிறவர்களும் இருப்பதுதான் இயக்கம்** என்ற பேருண்மையைத் தாங்கள் நன்கு புரிந்து, தெளிந்து எதற்கும் கலங்காமல் செயல்பட வேண்டும். இதுவே **குருவாணை**.

4) இம் மானுட இயல்பைப் பெரிதுபடுத்தி வன்மமோ, பகையோ, கடுமையான விமர்சனமோ செய்தல் கூடாது. பிறர் குறை கூறுவதைப் பெரிதுபடுத்திச் செயல்களைச் செய்யாமல் வாடித் தளர்ந்து விடக்கூடாது. நாம் ஓர் இயக்கமாக வளர்ந்து வருகின்றோம். நாம் ஒரு கட்சியாகவே அதாவது அரசியல் கட்சி போன்றே வளர்கின்றோம். எங்குச் சென்றாலும் நம்மை ஒரு கட்சி என்றே அறிவிக்க வேண்டும். ஏனெனில், கட்சிமுறையில்தான் நம்முடைய சிந்தனைகளையும், கட்டுக்கோப்புக்களையும் வளர்க்க வேண்டும். இதை விடுத்து இன்று மதம் எப்படி மக்களையும் அரசியலையும் விட்டு விலகி ஒதுங்கிப்

பதுங்கி இருக்கின்றதோ; அதுபோல் நாமும் இருந்தால் நம்முடைய தெளிவான கொள்கையை என்றுமே மக்களின் மத்தியில் கொண்டு வர இயலாது என்பதை நினைவுபடுத்துகின்றேன். பல கட்சிகளிலிருந்தும், பல இயக்கங்களிலிருந்தும் இந்துமத ஆர்வலர்கள் நமது இயக்கத்திலே சேரலாம் என்று கூறுகின்ற நாம்; நம்மிடமிருந்து பிரிந்து செல்பவர்களைப் பற்றியோ, விலகிக் குறைகூறிச் செல்பவர்களைப் பற்றியோ கவலைப்படக் கூடாது. அளவுக்கதிகமான விமர்சனம் வழங்கக் கூடாது. அப்போதுதான் நாம் நன்கு வளரமுடியும்.

5) நண்பா! நம்முடைய வரலாறு உண்மையானது; நமது தத்துவம் மெய்யானது; நம்முடைய இலக்கியம் சான்றுகளுடையது. நம்முடைய தத்துவத்தைத் தவறுகளுடையதாகவோ, கறைகளுடையதாகவோ ஆக்க முடியாது. ஆக்கவும் கூடாது. எனவே, நமது தத்துவ அமைப்பை விட்டு விலகிச் செல்ல விருப்பமுள்ளவர்களை மனம் **விரும்பிய காலம் வரை** விலகியிருக்குமாறு கேட்டுக் கொள்ளவும். அதில் தவறோ, வருத்தமோ யாருக்கும் இல்லை எனத் தெளிவாகக் கூறிவிடவும்.

பொறியியல் துறையில் பயின்றவன், தான் கற்ற அளவிற்கு நிறைவாகவோ அல்லது குறைவாகவோ அத்துறையில் பணியாற்றுகின்றான். அதேபோல் பிற துறையில் பணிபுரிகின்றவர்களும் தங்களுடைய புரிந்து கொள்ளும் சத்திக்கும் திறனுக்கும் ஏற்பவே செயல்படுகின்றனர். அவ்வாறு தனிமனிதர்கள் செயல்படும்போது ஏற்படுகின்ற தவறுகளை எப்படி அத்துறையின் தவறாகக் கருதுவதில்லையோ! அதுபோலத்தான் நமது சித்தர்நெறித் தத்துவத்தை உணர்ந்தவர்கள் தங்கள் தங்களின் ஆற்றலின் அளவிற்கு ஏற்பச் செயல்பாடுகளில் குறைகளை ஏற்படுத்தினால் அதற்கு இயக்கமோ, குருதேவரோ பொறுப்பல்ல! பொறுப்பல்ல! பொறுப்பல்ல! இது ஏன் புரியவில்லை?!?!?!...

6) இன்றைய தினம் அனைத்துக் கோயில்களிலும் வழிபாடுகள், விழாக்கள், பூசைகள் நடைபெறுகின்றன. செல்வாக்குள்ள பீடங்கள், மடங்கள் நாடெங்கும் உள்ளன. பத்தி மன்றங்கள், சபைகள் வலிவோடு செயல்படுகின்றன. இருந்தும் நாட்டை ஆண்டு கொண்டிருப்பவர்கள் நாத்திகவாதிகள்தான். இந்த நிலை எப்படி ஏன் ஏற்பட்டது? என்றைக்கு ஆட்சியானது மதத்துறைத் தலைவர்களின் கையிலிருந்து நழுவியதோ, அன்று முதல்தான் இந்நாட்டு மக்கள் தன்மானம், தன் இனம், தன் நாடு, தன்னம்பிக்கை போன்ற உணர்வுகளை இழந்தனர். இதுதான் வரலாறு தரும் படிப்பினை. இப்படிப்பினையை நன்கு கவனித்தால் புரியும், நாம் எவ்வளவு தூரம் கட்டுக்கோப்போடும், கடமையுணர்வோடும் செயல்பட வேண்டும் என்பது......

இத் தமிழகத்தில் காங்கிரசும், திராவிடக் கழகங்களும் அன்றிப் பிரிதொரு அமைப்போ, கட்சியோ ஆட்சிக்கு வர முடியாது என்ற அபத்தமான நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இது ஓர் அபத்தமான ஆபத்தான நிலையாகும். இதனை நாம் உணர்ந்தேதான் 'ஆன்மீக வாதிகள்தான் நாடாள வேண்டும். ஆன்மீக வாதிகளால்தான் உண்மையோடும், உணர்வோடும் அரசாள முடியும்...' என்ற நெறிகளோடும், மக்கள் மறுமலர்ச்சிக்கான சிந்தனைகளோடும்... அணி அணியெனப் பல அமைப்புக்கள் மூலம் செயல்பட்டு வருகின்றோம். இவற்றில் சில காலமேனும் பண்பட்டவர்கள் போதும் என்ற மனநிறைவுடன்தான் போராடத் துவங்கியுள்ளோம் நாம்.

எனவே, தாங்கள் சுற்றுப்பயணம் செல்லுகின்ற இடங்களிலெல்லாம் ஒரு நபர் கிடைத்தால் கூடப் பரவாயில்லை என்று ஏற்று அவரை வைத்து நமது 12 அமைப்புக்களிலிருந்து ஏதேனும் ஒன்றின் தலைவராக அவரைச் செயல்படுமாறு கூறிக் கிளை அமைப்புக்களைச் செயல்பட வைப்பதிலேயே கண்ணாக இருக்க வேண்டும். அப்போதுதான் விளம்பரமோ, ஆரவாரமோ, பொருள் வளமோ, ஆள் செல்வாக்கோ

இல்லாமல் செயல்படுகின்ற நமக்கு உறுதியான கட்டமைப்புக் கிட்டும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றோம்.

நண்ப! நாம் RSS போன்றோ! இந்து முன்னணி போன்றோ! விசுவ இந்து பரிசத் போன்றோ! கிறித்துவர்களையும், முகம்மதியர்களையும் தாக்கிச் செயல்படுவதில்லை. அனைத்து அருளாளர்களும் அருளுலகில் ஒன்றே! அவர்களும் நம்மவர்களே! என்ற அடிப்படையில் செயல்படுகின்றோம். எனவே, **இந்துமதம் போராட்டத்தை, வேறுபாட்டை மற்ற ஹிந்து இயக்கங்கள் நடத்துவதின் மூலம்; மக்களை வேறுபடுத்தியும், கூறுபடுத்தியும் ஆரியக் கூட்டம் தலைமையிலிருக்கவே விரும்புகின்றது என்பதை நம்மவர் உணர்ந்தும் உணர்த்தியும் செயல்பட்டிடல் வேண்டும்**.

7) இனிய தோழ! இனிமேலாவது விலகிச் செல்லுகின்ற தோழர்களைப் பற்றியோ, விலகுகின்ற அடியார்களைப் பற்றியோ அதிக கவலையடையாமல் செயல்பட வேண்டும். தாங்களே குழம்பி நிலை தடுமாறினால் அதன் எதிரொலி சுற்றியுள்ள நம்பிக்கை நட்சத்திரங்களிலும் பதிந்திடும். அதனால், நமது கட்டுப்பாடும் ஒழுங்கும் கலகலத்து வெலவெலத்து விடும். எனவே, தங்களின் இப்போக்கு இம்முறையே கடைசியாக இருக்கட்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன்.

8) இன்றைக்கு நாட்டுநடப்பில் “மதம் தேவையற்றது! பயனற்றது! காட்டுமிராண்டித் தனமானது! ஆபாசமானது! அறிவுக்கு ஒவ்வாதது! ஏமாற்றுக்கு உதவுவது! சுரண்டலுக்கு உதவுவது! முதலாளித்துவத்தை வளர்ப்பது! தனிமனித வழிபாட்டைப் பரப்புவது! அடிமைப் புத்தியை வளர்ப்பது! பார்ப்பன ஆதிக்கத்திற்கு அடிவருடிகளை உருவாக்குவது! சாதிச் சண்டைகளையும், பெரிய மதப்போர்களையும் உருவாக்குவது! …” என்ற கருத்தோட்டங்களே வளர்ந்துள்ளன. இக் கருத்தோட்டங்களினால்தான் நாம் வளரமுடியவில்லை என்ற ஒரு மாயம் நம்மிடையே பலரிடம் தோன்றியிருக்கிறது.

அதாவது, நாம் ‘இந்துமதம்’, ‘பூசை’, ‘கோயில்’, ‘மந்திறம்’, ‘சோதிடம்’, ‘அருட்கணிப்பு’, ‘அருள்வாக்கு’, ‘சன்னிதான உடை’ ... என்றவற்றையெல்லாம் விட்டுவிட்டு மொழிக்கும் இனத்துக்கும் மட்டுமே நேரடியாகத் தொண்டு செய்பவர்களாக இயங்கினுல்தான் மிகப் பெரிய இயக்கமாகி வளர்ந்திட முடியும் என்ற கருத்தோட்டம் நம்மில் பலரிடையே முளைத்திருக்கின்றது. இது உண்மையேயானுல், பன்றிமலை சாமியாரின் பெயராலும், புட்டப்பருத்திச் சாமியாரின் பெயராலும், மேல்மருவத்தூர் அடிகளாரின் பெயராலும் மிகப்பெரிய இயக்கங்கள் வாழ்ந்து கொண்டிருக்க முடியாது.

மேலும், வார ஏடுகளையும், நாளேடுகளையும், திங்கள் இதழ்களையும் புரட்டினுல் செத்துப் போன அருளாளர்களிலிருந்து இன்றைக்கு மூலைமுடுக்குகளில் உள்ள அருளாளர்கள் வரை வண்ணப்பட விளம்பரங்களோடு வாழ்க்கை வரலாறுகளும், தத்துவ விளக்கங்களும், சாதனைகளும், போதனைகளும் பெரிய அளவில் வெளிவருவதை உணரலாம். பிறகு **நாம் ஏன் விளம்பரம் அடையவில்லை? வளர முடியவில்லை?** என்ற வினுவெழுப்பிச் சிந்தித்துப் பாருங்கள்! அப்போதுதான் நமது எதிரிகளின் நிலை, துரோகிகளின் நிலை, விரோதிகளின் நிலை தெளிவாக விளங்கிடும்.

ஏறத்தாழ நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது தமிழன் பிருமண அடிமையாக, சமசுக்கிருத அடிமையாக, மடமைவாதியாக, பழமைவாதியாக, அப்பாவி மதவெறியனுக வாழுகிருன் என்பது புரிந்திடும். மீதியுள்ள ஒருவனிலும் நாத்திகன், பகுத்தறிவுவாதி, பிருமணக் கைக்கூலி, வேற்றுமத அடிமை, போலி, சோம்பேறி, எதார்த்தவாதி, கோழை, மோழை என்பவர்களே மிகுதியாக உள்ளார்கள். எனவே, தமிழர்களில் பலநூறுயிரம் (பல இலட்சம்) பேர்களுக்கு ஒருவர்தான் சிந்திக்கக் கூடியவர்களாக இருக்கின்றுர்கள். அவர்களிலும், இனப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, பண்பாட்டுப் பிடிப்பு, தன்னம்பிக்கை, தன்மானம் உடையவர்கள் மிகமிகக் குறைவே!

இவற்றையெல்லாம் ஒரு குறிப்பிட்ட அளவு உணர்ந்த முதல் மாபெரும் தன்னிகரற்ற தமிழினத் தலைவர் தந்தை பெரியார் ஒருவர்தான். அதுவும் அவர் ஒரு பெரிய பரம்பரைப் பணக்காரராக இருந்திட்டதனால்; அவர் வறுமையை முற்றிலும் ஒழிக்கக்கூடிய பொருளாதாரச் சிந்தனையைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை; பாட்டாளி வர்க்க உணர்வைத் தட்டியெழுப்ப வேண்டும் என்ற அவசியத்தை உணரவேயில்லை; இந்துமதத்தைத் தமிழ்மொழியின் அடிப்படையில் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற கருத்தோட்டத்தைப் பெறவில்லை; சமுதாயத்தின் ஆணிவேர்களான பூசாறிக் கூட்டத்தின் (Priestly Community) ஏழ்மை நிலையைப் பற்றி எண்ணிப் பார்க்கவேயில்லை. எனவேதான், அவருடைய சுற்றுப் பயணங்களும் பெரிய பெரிய நகரங்களின் அளவிலேயே பெரும்பாலும் நின்றுவிட்டன. மேலும், அவர் ஆட்சியில் யார் இருந்தாலும் அவர்களையே ஆதரிப்பது என்ற மிதவாத நிலையில் இருந்துவிட்டார்....

இப்படிப்பட்டக் குறைகள் நம்மால் கண்டுபிடிக்கப்பட்டாலும் நாம் அவரைத்தான் நம்முடைய கௌரவத் தலைவராக அறிவித்துள்ளோம். ஏனென்றால், அவரின் சிந்தனை வீச்சும், கருத்துப் புயலும் தமிழகம் முழுவதும் தாக்கி உள்ளன. அவரிடம் ஈடுபாடு கொண்டுள்ளவர்கள் தமிழகத்தின் அனைத்துக் கிராமங்களிலும் ஊர்களிலும் உள்ளார்கள். ஆனால், அவர் பெயரால் உள்ள கழகமோ, முன்னணித் தலைவர்களோ உண்மையான கொள்கை வளர்ச்சிக்காகத் தமிழின விழிச்சியில், மொழி மறுமலர்ச்சியில், இன விடுதலையில், நாட்டின் உரிமையில், பிராமண எதிர்ப்பில், மதச் சீர்திருத்தத்தில், பகுத்தறிவுப் பணியில்,... நம்பிக்கையோடு செயல்படவில்லை, செயல்படவில்லை, செயல்படவில்லை. எனவேதான், நண்ப! தாங்கள் தந்தை பெரியார் திராவிடர் கழகம், பாட்டாளி வர்க்கக் கழகம் என்ற இரண்டையும் இரு கைகளாகக் கொண்டு செயல்படுங்கள். அதாவது, நாம்தான் நாத்திகர், பகுத்தறிவாளர், பாட்டாளி வர்க்கம், ஏழை மக்கள், ... முதலியோரைச் சந்திக்கத்

தயாராக இருக்கின்றோம், தயாராக இருக்கின்றோம், தயாராக இருக்கின்றோம்.

9) அதாவது, நாம்தான் துணிவோடும், பணிவோடும், கனிவோடும், பொறுப்போடும், பொறுமையோடும், சமாதானத்தோடும், ... அனைத்து வகையான சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கியக் கட்சிகளோடும், கழகங்களோடும், இயக்கங்களோடும், சபைகளோடும், சங்கங்களோடும், மன்றங்களோடும், ... உரையாட, விவாதிக்க, பேசிப் பழகிடத் தயாராக இருக்கிறோம்! இருக்கிறோம்! இருக்கிறோம்! எனவே, நாம் தன்னம்பிக்கையோடும், கொள்கைத் தெளிவோடும், நமது இலக்கிய அறிவு வளத்தோடும், நமது வரலாற்றறிவு வலிமையோடும், நமது தத்துவச் சித்தாந்தப் பொலிவோடும், ... நிதானமாகத் தொடர்ந்து செயல்பட்டேயாக வேண்டும். எந்தவிதச் சலனமோ, கவலையோ, தயக்க மயக்கமோ, கலக்கக் குழப்பமோ, மறுப்பு வெறுப்போ, ... நம்மை நிலைதடுமாறச் செய்துவிடக் கூடாது! எச்சரிக்கை! எச்சரிக்கை! எச்சரிக்கை!

ஏனெனில், நாம்தான், **“தமிழர்களே இம்மண்ணுலக அருளியலுக்கும், பொருளியலுக்கும், கலையியலுக்கும் ... மூலவர்கள், காவலர்கள்”** என்ற பேருண்மையை உணர்ந்து செயல்படுகிறோம். அதாவது, **தமிழர்களின் அடிமையுணர்வு, கூலியுணர்வு, போலியுணர்வு, கங்காணியுணர்வு, பிறமணப் பத்தி, சமசுக்கிருதப் பத்தி, ... முதலியவைகளை வேருடன் பறித்தெடுத்து எரித்துச் சாம்பலாக்கிக் கடலில் கரைத்த பிறகுதான் தமிழர்களை ஒன்றுதிரட்ட முடியும். அதன்பிறகே ஒற்றுமைப்படுத்தலையும், ஒருமைப்படுத்தலையும் செய்ய முடியும்! செய்யமுடியும்! செய்யமுடியும்! ...** என்ற கருத்தையே சித்தாந்தச் செயல்வடிவமாக உள்ளவர்களே நாம்.

எனவே, நமது சுற்றுப்பயணங்கள், அ.வி.தி. பணிகள், சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள், விழாக்கள், பொது நிகழ்ச்சிகள், ... முதலிய அனைத்திலும் நம்மை இயக்கப் பூர்வமாக அறிமுகப்படுத்தியே

செயல்பட வேண்டும். அதாவது, **'நாம் ஒரு மாபெரும் சமய, சமுதாய, கலை, இலக்கிய, அரசியல் துறைகளைத் தூய்மைப்படுத்தி வாய்மைப்படுத்தும் இயக்கம்'** என்ற கருத்தைத் திருத்தமாகவும், தெளிவாகவும், வெளிப்படையாகவும் முழுமையான விவரங்களால் அறிமுகப்படுத்த வேண்டும். அதன்பிறகு இ.ம.இ., அ.வி.தி. ஆகிய இரண்டையும் நமது தத்துவக் கண்களாகவும், த.பெ.தி.க., பா.வ.க. ஆகிய இரண்டையும் நமது செயல்சித்தாந்தக் கைகளாகவும் பயன்படுத்த வேண்டும். செல்லுமிடமெல்லாம் மேற்படி இயக்கக் கிளைகளைத் தோற்றுவித்திடுங்கள். அப்பொழுதுதான், நாம் இந்த நாட்டில் ஒரு வலுவான கொள்கையையும், வளமான குறிக்கோளையும் உடைய ஓர் இயக்கமாக வளரமுடியும். நாம் ஆங்காங்கே தனிமனிதர்களை வளர்க்கவில்லை. தத்துவத்தின் நாயகர்களையே வளர்க்கிறோம். எனவே, நாம் உறுதியாக வெற்றி பெறுவோம். அருளாட்சி அமைப்போம். நமது வெற்றி தத்துவத்தின் வெற்றியே!

**(ஒப்பம்)**

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரர்.**

<u>**நகல் எடுத்தவர்**</u>**:-**

அருள்மிகு தில்லைப் பொன்மன்றில் ஆடுகின்ற கூத்தர்ப்பெருமான் சன்னிதானம், சித்தரடியார் ஏ.இரவி B.Sc.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# நாம் எதையுமே விமர்சிக்கத் தயங்கக் கூடாது!

பொன்னேரி,
30.1.86.

பேரன்புமிக்க இனிய அருள்மிகு தேவதானப்பட்டி காமாட்சியம்மன் சன்னிதானம் அவர்களுக்கு,

கவிக்குமார் வணக்கத்துடன் வரையும் மடல்.

தங்களின் கடிதம் கிடைத்தது. செய்திகளறிந்தேன். நலம். தங்கள் மற்றும் குடும்பத்தினரின் நலமறிய ஆவல்.

1) தங்களின் சிந்தனை நிறைந்த கேள்வியையும், ஐயம் நிறைந்த கேள்விகளையும் கண்டோம். ஏற்கனவே, இதேபோன்று கேள்விகளுக்கு குருதேவரும் யாமும் நேரடியாகப் பல பக்கங்களில் வீ.மா.சன்னிதானத்துக்கு கடிதங்கள் வரைந்துள்ளோம். படித்துணர்க! இல்லையெனில், 10.2.86 அமாவாசைக் கூட்டத்தில் படித்துணர்த்தப்படும்.

2) வருவோர்-போவோர் பற்றிய கவலைகள் வேண்டாம். ‘ஞானக்காட்சி’யைப் பற்றிய ஐயத்தைக் கண்டேன். கூரான கத்தி ஆபத்து என்பதால் வீட்டில் வைத்துக் கொள்ளாமலில்லை. மின்சாரம் உயிரைக் குடிக்கும் என்றாலும் நாம் உபயோகப் படுத்தாமலில்லை. அதுபோல்தான் ‘ஞானக்காட்சி’யும். முறையாகவும் முழுமையாகவும் பயிற்சிகள் இல்லாதவர்களால் காணப்பட்டு பல்வேறு விதமான தெளிவின்மையால் ஏற்படுகின்ற தொல்லைகள்தான் அதிகம். ஞானக்காட்சியோ அதன் உள்ளார்ந்த மரபோ தவறுடையதல்ல.

3) ... ... ... ... ... *[தனிப்பட்ட ஒருவருக்கான கருத்து என்பதால் சில வரிகள் இந்த இடத்தில் நீக்கப்பட்டுள்ளன.]* எனவே, சம்பாதிக்கக் கூடிய அனைவரும் சுமார் ரூ.500 அல்லது ரூ.1000 பணம் போட்டு The Siddha Chemical Industries or The Tamilnadu Siddhantha Products (pvt) Ltd என்ற ஒரு நிறுவனத்தைப் பதிவு செய்து பங்குதாரர்களையும் சேர்த்து பல்பொடி, தைலம், காயகல்பம், சூரணம், காபி, டீ, தேயிலை, சத்துணவு, மஞ்சள் காமாலை மருந்து, ஆசுத்துமா மருந்து, வெட்டை நோய் மருந்து, தோல்நோய்களுக்கு மருந்து, நரம்புத் தளர்ச்சி மருந்து, பயித்தியம் ... போன்றவைகளுக்கு மருந்தும் மருத்துவமும் தயாரிக்கின்ற நிறுவன நிர்வாகத்தை அமைத்திடுவோம். வசதிக் குறைவானவர்களுக்கு பங்கு ரூ.10/- என்று விற்று விடுவோம். நிதி திரட்டுவோம். இந்த நிறுவனத்தோடும், நிர்வாகத்தோடும் பதிப்பகம், கலைக்குழு, நாடகக் குழு, ஒருசில பயிற்சிக் கல்லூரிகள் (Tutorial College, Musical and Dance Colleges, Private Tution) ... முதலியவைகளை ஒன்றன்பின் ஒன்றுகச் சேர்த்துக் கொள்ளவும். அப்போதுதான் நாம் சிலருக்கு வேலை கொடுக்கலாம். பலரை முழுநேர ஊழியர்களாகப் பயன்படுத்தலாம்.

இதற்குரிய அலுவலக இடமாக வ.ஆ. மாவட்ட வேலூர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. ஏனெனில், அருளுலக மையமான (The Divine Centre) மதுரையில் எப்போதும் சண்டையும், சச்சரவும்தான் இருக்கின்றது. எனவேதான், வணிக மையம் அல்லது தொழில் மையம் (Commercial or Industrial Centre) ஆக உள்ள போட்டி பொறுமை சண்டை சச்சரவு இல்லாத இடத்தை (வேலூரை) உருவாக்கியுள்ளோம். மேலும், அவிர்சடைக் கடவுள் சன்னிதானம் சுப்பையா B.E., DM, PATC நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி உள்ளார்.

நமக்குப் பொருளாதாரச் சார்புள்ள வளர்ச்சி தேவை! தேவை! தேவை! வேறு ஏதேனும் செயல்திட்டம் இருந்தாலும்; தரும் நமது படைப்புக்களை (The Products and Publications) மாவட்டந் தோறும் விற்பதற்கு ஒரு கடை கிடைத்திடும்; அல்லது உறுதியாக உருவாக்கப்படும். அந்தக் கடையே நமது அனைத்து வகையான நிறுவன நிருவாகத் தலைமையிடமாக இருக்கும்.

4) நண்ப! பணவசதி உள்ள தி.க.வினர் “தமிழா! இன உணர்வு கொள்!” என்ற வாசகத்தை அனைத்துச் சுவர்களிலும் எழுதி வைத்துள்ளனர். ஆனால், தமிழர்களிலேயே பெரும்பகுதியினர் அரசியல் கட்சிகளாலும், மதங்களாலும் தங்களைத் தமிழர்கள் என்று மறந்தும், மறுத்தும் வாழ்கின்றனர். அது மட்டுமல்ல, *‘இனவுணர்வு என்பது பிரிவினை வாதம். அது கூடாது. இது நாட்டின் அமைதியைக் கெடுக்கும், ஒற்றுமையை அழிக்கும், இனக் கொள்கை என்பது ஒரு கற்பனாவாதம். (Racialism is a Myth and it is only an imaginative theory of the Capitalist) இது முதலாளித்துவத்தின் சூழ்ச்சியான பிரிவினைக் கொள்கை...’* என்ற கருத்துக்களும் நிலவுகின்றன.

இவற்றிற்கெல்லாம் மேலாக; *தமிழன் என்ற இனத்தை மொழியின் அடிப்படையில் கூறுகின்றீர்களா? நாட்டின் அடிப்படையில் கூறுகின்றீர்களா? ஆரியரும் தமிழர்களே! தமிழரையும், ஆரியரையும் இனி பிரிக்க முடியாது. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலத்திலும் தமிழர்கள் வாழுகின்றார்களே! என்ன செய்வீர்கள்? தமிழ்நாட்டில் தமிழினத்தைச் சாராத அனைவரையும் வெளியேற்றி விடுவீர்களா?* ... என்று சரமாரியாக தமிழினக் கூலிகளும், காலிகளும், போலிகளும், பகைவர்களும், அப்பாவிகளும், ஏமாளிகளும் கடலலை போல் பேரொலியுடன் கேள்விகளை எழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

இவை பற்றிய கருத்தரங்குகள் நடத்தி (The Study Centres) அவற்றை ஆய்வரங்குகளுக்குக் (The Research Centres) கொண்டு

சென்று இதுபற்றி ஆராய்ந்து; இறுதியாகப் பட்டிமன்றங்களுக்குக் கொண்டு சென்று (The Discussion Centres) பின்னர் அறிவியல் பூர்வமாக (A Scientific Method) பகுத்தறிவு அணுகுமுறையில் (A Rationalistic approach) படித்தவர்களின் பண்பாட்டுத் தன்மையோடு (An Educated and Cultured Touch) முடிவெடுத்தே செயல்பட வேண்டும் என்ற கருத்தோட்டத்தைத்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் பாரம்பரியமாகத் தோன்றிய இரண்டாவது தலைவர் காக்காவழியன் பண்ணையாடி சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

திரு M.N.ராயும், திரு சின்னவும் பலமுறை சித்தர் காகபுசுண்டர் அவர்களை சுயமரியாதைத் தலைவர் ஈரோட்டு இராமசாமி நாயக்கருடன் (பெரியார் ஈ.வெ.ரா.) செயல்படுங்கள் என்று கூறியும் அவர்கள் மேற்கூறிய கருத்துக்களையே வழங்கினர். ஆனாலும், சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்கள் ‘தமிழினத்தின் தன்மானத்தையும், தன்மான உணர்வையும், தன்னுரிமையையும், மொழியுரிமை, நாட்டுரிமை, இன உணர்வு... முதலியவைகளையும் பட்டுப் போகாமல் பாதுகாத்த பெருமையும், அருந்திறலும் தமிழினத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா.வுக்குத்தான் உண்டு’ என்று கூறி அவருக்கு தனது முழு ஆதரவையும் தந்தார். எனவேதான், பெரியார் ஈ.வெ.ரா.வின் பிருமண எதிர்ப்பு, மதச் சீர்திருத்தம், மொழிச் சீர்திருத்தம்... என்று எந்தப் பணியிலும் எவ்விதக் கருத்தும் கூறாமல் ஒதுங்கி இருந்து கொண்டிருந்தார்.

இருந்தபோதிலும், பெரியார் ஈ.வெ.ரா.வின் உழைப்புக்கள் அனைத்தும் முழுமையான பயனை நல்க வேண்டும் என்றால், அவருடைய போதனைகளையும், சாதனைகளையும் பற்றிக் கற்றறிந்த பெருமக்கள் நடுநிலையில் நின்று பகுத்தறிவுப் பூர்வமான பட்டிமன்றங்களையும், விவாதங்களையும் நிகழ்த்தியே ஆக வேண்டும் எனக் கூறியுள்ளார்.

எனவேதான், பணவசதி உள்ளது என்பதற்காகப் பெரியாரின் பெயரைச் சொல்லிக் கொண்டு "தமிழா! இன உணர்வு கொள்" என்ற வாசகங்களைக் கூறுவதால் எந்தப் பயனுமில்லை என்ற விமர்சனத்தை வழங்குகின்றோம் நாம். இந்த விமர்சனம் தனிப்பட்ட நபரான தி.க. தலைவரான கி.வீரமணியை எதிர்த்தோ, தி.க.வினரை எதிர்த்தோ கூறப்பட்டதல்ல! இது முழுக்க முழுக்க "தமிழா! இன உணர்வு கொள்!" என்ற வாசகத்தின் பொருளைச் செயலாக்க வேண்டும் என்ற உணர்வால் வருகின்ற பேராசையால் விடுக்கப் படுகின்றவையாகும்.

5) நண்ப! நம்மைப் பொறுத்தவரை, 'தமிழன் ஏன் இன உணர்வு கொள்ள வேண்டும்' என்ற வினாவை எழுப்பவில்லை. நாம் எழுப்புகின்ற வினாக்கள் எல்லாம் 'தமிழனை எப்படி இன உணர்வு கொள்ள வைப்பது? தமிழனிடத்திலே முளை விடுகின்ற இன உணர்வை எப்படிச் செழிப்பாக வளர்த்துப் பயிராக்குவது? தமிழின உணர்வு என்கின்ற பயிர் விளைந்து என்ன அறுவடையைத் தரவேண்டும்? அந்தப் பயிரின் அறுவடையை எதிரிகளிடமிருந்து எப்படிக் காப்பாற்ற வேண்டும்? ஆடுமாடுகள் என்னும் விரோதிகள் மேய்ந்து விடாமல் தமிழின உணர்வு என்னும் பயிரை எப்படிக் காப்பாற்ற வேண்டும்? இந்த தமிழின உணர்வு இலக்கிய மறுமலர்ச்சி மூலமே வளர்க்கப்பட வேண்டுமா? அல்லது சமுதாய மறுமலர்ச்சி மூலம் வளர்க்கப்பட வேண்டுமா? அல்லது மத மறுப்பு, வெறுப்பு, எதிர்ப்பு, நாத்திகம், பிருமண எதிர்ப்பு முதலியவைகள் மூலம் வளர்க்கப்பட வேண்டுமா? அல்லது தமிழினத்தின் பண்பாட்டுக்கும், நாகரிகத்துக்கும் அடிப்படையாக இருக்கின்ற சித்தர்நெறி எனும் இந்துமதத்தின் வரலாறுகளையும், இலக்கியங்களையும், சடங்கியல்களையும், வாழ்வியல்களையும் விளக்கி உரைத்துப் புத்துணர்ச்சி ஊட்டி தமிழின உணர்வை வளர்க்க வேண்டுமா? ...' என்பதுதான் நாலும் தெரிந்தவர், ஆராய்ச்சிப் போக்குடையவர், பகுத்தறிவுப் போக்குடையவர், ...

என்ற நிலையில் வாழும் நமது தலைவர், குருதேவர், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்களின் வேண்டுகோள் அறிவுரை.

இதனைப் புரியாமல் சிலர், ‘கி.வீரமணியை நாம் குற்றம் கூறுவதன் மூலமோ, அவர் நம்மைக் குறை கூறுவதன் மூலமோ வளர்ந்து விட முடியாது’ என்று நம்மைப் பற்றிக் கூறுகின்றனர். நாம் வளர வேண்டுமென்பதற்காக அவரைப் பற்றிக் கூறவில்லை. பெரியாரின் கனவை நனவாக்க வேண்டும் என்ற ஆர்வத்தால் மட்டுமே கூறுகின்றோம். எனவே, நம்மவர்கள் நாம் வீரமணியை விமர்சிப்பது தவறென்றோ! பெரியார் ஈ.வெ.ரா.வையே விமர்சிப்பது தவறென்றோ! கூறத் தேவையில்லை. நாம் கருத்துப் புரட்சியையும், பண்பாட்டுப் புரட்சியையுமே கூறுகின்றோம். எனவே, எதையுமே விமர்சிக்கத் தயங்கக் கூடாது.

ஏனெனில், விமர்சன உணர்வு எந்த ஒரு இயக்கத்தையும் சுறுசுறுப்பாக நடுநிலையில் நின்று செயல்படச் செய்யும். தனிமனிதர்களோ, தத்துவமோ, இயக்க நடவடிக்கையோ, செயல்திட்டங்களோ விமர்சனங்களுக்கு உள்ளாகக் கூடாது என்ற கருத்தோட்டத்தை உடைய எந்த நிறுவனமும் தொடர்ந்து வளர்ச்சி பெற முடியாது. உண்மையான முழுமையான வெற்றியை அடைய முடியாது. இதுவே சித்தர்நெறியின் உயிர்நாடியான மெய்யான சித்தாந்தம் ஆகும். எனவே, நம்மவர்களுக்கிடையில் காரசாரமான விவாதமோ, கடுமையான விமர்சனங்களோ, ஏச்சுப்பேச்சுக்களோ, சண்டைச் சச்சரவுகளோ நிகழ்வதை எவரும் தவறாக எண்ணத் தேவையில்லை. நமக்கு ஏற்பட்ட தாழ்ச்சியாகவோ, வீழ்ச்சியாகவோ, சிதைவாகவோ எண்ணத் தேவையில்லை. இன்னும் சொல்லப் போனால், நாம் உயிரோடும் உணர்வோடும் வெகுவேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதற்கான அறிகுறிகளே இவைகள்.

அதாவது நம்மைக் குறைகூறுபவர்களும், விட்டு விலகிச் செல்பவர்களும் நம்முடைய வளர்ச்சிக்கு சாட்சியம் கொடுத்து விட்டுச் செல்பவர்களாகத்தான் இருக்கின்றுர்கள் என்பதுதான் பொருள். எனவே, சண்டைச் சச்சரவு என்ற சலசலப்புகளுக்காகக் கவலைப்படத் தேவையே இல்லை.

6) நண்ப! 1917இல் இரசியப் புரட்சி நடந்த நாள் முதலாக அல்லது அதற்கு முன்பிருந்தே இந்தியத் துணைக் கண்டத்தில் *'பாட்டாளி வர்க்கமே ஒன்றுதிரண்டிடு! ஒன்றுபட்டிடு! ஒற்றுமை பெற்றிடு! ஒருமுகமாகப் போரிடு! ஒரே தலைமையை ஏற்றிடு! உன்னுடைய ஒரே பகையான முதலாளித்துவ இனத்தை இனங்கண்டு கொள்க! முதலாளித்துவத்தின் சூழ்ச்சிகளை முறியடிக்கக் கற்றுக்கொள்! முதலாளித்துவத்தின் ஊடுருவல்களுக்கு இடங்கொடுக்காதே! கருங்காலிகளை விலக்கிடு! போலித் தலைவர்களை விரட்டிடு! வர்க்க உணர்வை வளர்த்துக் கொள்! வர்க்கப் போராட்டத்திற்காக உழைக்கும் மக்களுக்குப் பொதுவுடமைச் சித்தாந்தத்தை கற்றுக் கொடுத்திடு! தத்துவ நாயகர்களையே தலைவர்களாக்கு! கட்சி நிறுவனங்களைப் பிற்போக்கு வாதிகளுக்கு அடகு வைக்காமல் கட்டிக் காத்திடு! இளந் தலைமுறையினரை கூலிக்காரர்களாக ஆக்கிடாதே! போராட்ட உணர்வு என்னும் நெருப்பு அணைந்து விடாமல் எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் வண்ணம் சித்தாந்தக் கல்வியை பசுமையாக வளர்த்திடு! தொழிலாளர் இயக்கங்களை முதலாளிகள் விலை கொடுத்து வாங்கிடாமல் ஒன்றுக்கொன்று தோழமை உணர்வுடன் இணைந்து பிணைந்து செயல்படச் செய்! ...'* என்றெல்லாம் கருத்து வாசகங்களைக் கொடுத்து மார்க்சீயச் சிந்தனை விதைகளை இந்திய மண்ணில் விதைத்திட்ட இ.ம.இ.யின் இரண்டாவது தலைவர் காக்காவழியன் பண்ணையாடி சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்களே; '<u>இந்திய மண்ணில் மார்க்சீய மரணம்</u>' என்று நூல்களை எழுத நேரிட்டது என்றுல்?! *.....;* **நமது இந்திய நாட்டிலோ,**

**தென்னிந்தியாவிலோ, தமிழகத்திலோ மார்க்சீயச் சித்தாந்தக் கருத்து விதைகளைப் பயிராக்கிட புதிய புரட்சிகரமான விவசாய முறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டேயாக வேண்டும்** என்ற பேருண்மை தெளிவாயிற்று.

அப்பேருண்மையின் நுட்பதிட்பங்களின் செயல்வடிவமாகத்தான் நமது தலைவர், ஞானாச்சாரியார், குவலய குருபீடம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் செயல்படுகின்றார். அதாவது, நமது நாட்டில் அலுவலகப் பாட்டாளிகள், ஆலைத் தொழிலாளிகள், விவசாயிகள், அன்றாடக் கூலிகள், சொற்பமான சொத்துக்களை உடைய ஏழைகள் (இவர்கள் தங்களுடைய அலுவல் மட்டும் பார்க்கின்ற பாட்டாளிகள்) ... என்றிப்படி மிகப்பெரிய இடைவெளிகளை உடைய ஏற்றத் தாழ்வுகளெனும் வேறுபாடுகளை உடைய பாட்டாளி வர்க்கப் பிரிவுகள் இருக்கின்றன. இந்தப் பிரிவுகளை எல்லாம் எந்த விகிதாச்சாரத்தில் அல்லது செயலடிப்படையில் தத்துவ அறிவையும், சித்தாந்தச் செயலறிவையும் எப்படிப் பெறச் செய்வது என்பதுதான் உண்மையான போராட்டம்.

7) நண்ப! மேற்படி உண்மையான போராட்டத்தை இந்த நாட்டின் சமய சமுதாய அரசியல் கலை இலக்கிய பண்பாட்டுப் பாரம்பரியக் கூறுபாடுகளின் அடிப்படையில் ஒப்பிட்டுப் பல ஆராய்ச்சிகளைச் செய்தால்தான், இந்த நாட்டின் பாட்டாளி வர்க்கம் தனக்கே உரிய வர்க்க உணர்வை, அதாவது பாட்டாளி என்ற இன உணர்வைப் பெற்றிட முடியும். அப்படிப் பெற்றிடும் பாட்டாளி உணர்வின் வளவளர்ச்சியிலும், வலிமைச் செழுச்சியிலும்தான் மார்க்சீயச் சித்தாந்தக் கருத்துக்களைப் பாட்டாளிகள் தெரிந்து கொள்வதோ, புரிந்து கொள்வதோ அல்லது உணர்ந்து நம்பி ஏற்றுக் கொள்வதோ இயலும்.

இதற்கு ஒரே ஒருவழி இந்த நாட்டின் அனைத்து வகையான அறிவியல்களுக்கும் கலைகளுக்கும் (Science and Arts), தத்துவங்களுக்கும் சித்தாந்தங்களுக்கும் (The Philosophy and Theology) உள்ளீடாக, உயிராக, இயக்கச் சத்தியாக இருக்கின்ற இந்துமதம் மறுமலர்ச்சி அடைய வேண்டும். அதுவும் கண்மூடித்தனமான, காட்டுமிராண்டித்தனமான மடமை நிறைந்த பத்தி இயக்கமாக இருந்துவிடக் கூடாது. இதற்காகத்தான் இந்துமதத்தைத் தோற்றுவித்த **'இந்துமதத் தந்தை'**யான பதினெண்சித்தர் பீடாதிபதியே **மெய்யான இந்துமத**த்தின் வரலாறு, இலக்கியம், கலை, போதனை, சாதனை, சடங்கியல், ... முதலிய அனைத்தையும் விளக்கி உரைத்து நடைமுறைப்படுத்த வந்திருக்கிறார்.

அதாவது, 'இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்பது பகுத்தறிவுப் பூர்வமானதாகவும், விஞ்ஞானச் சூழலை உடையதாகவும், வரலாற்றடிப்படைகளை உடையதாகவும், வளமான இலக்கியச் சான்றுகளையும், ஊன்றுகளையும் உடையதாகவும், நிகழ்கால உலகியல்களுக்குப் பயனுடையதாகவும் ...' இருக்கும் வண்ணம் இ.ம.இ. நடத்தப்படுகின்றது. இதை நம்மவர்கள் உணர்ந்தும் உணரவைத்தும், புரிந்தும் புரியவைத்தும் செயல்படுங்கள்!

அதாவது, ஒவ்வொரு தெருவிலும் இ.ம.இ., அ.வி.தி., த.பெ.தி.க., பா.வ.க. கொடிகள் பறக்க விடப்பட வேண்டும். கிளைகள் அமைக்கப்பட வேண்டும். கையெழுத்துப் பிறதி நூலகங்கள் அமைக்கப்பட வேண்டும். அச்சிட்ட வெளியீடுகளைப் பலரும் படிப்பதற்குரிய படிப்பகங்களை அமைக்க வேண்டும். அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களிலும், சித்தர்களின் அமுதத் தமிழ்மொழியின் அருளூறு வாசகங்களைப் பூசைகளில் பயன்படுத்தப்பட வேண்டும். சுடுகாடுகளிலும், இடுகாடுகளிலும் மந்திரவாதிகளைத் தடைசெய்வதற்குரிய பூசைகள் நடைபெற வேண்டும். திரிசூலங்கள் நடப்பட வேண்டும்.

வீணான மதச் சண்டைச் சச்சரவுகளையும், போட்டி பொறாமைகளையும், பகைமைப் போர்களையும் அகற்றிடும் பணி நிகழ வேண்டும். இதற்காக விசுவ இந்து பரிசத், RSS, இந்து முன்னணி, ... முதலிய இயக்கங்கள் மக்களைத் திசை திருப்புவதற்காக வளர்த்து வரும் மத மறுப்புப் பணிகளையும், வெறுப்புப் பணிகளையும் தடை செய்ய வேண்டும். **மெய்யான இந்துமதம்** முதலாளித்துவப் போக்கையும், சர்வாதிகாரப் போக்கையும், சுரண்டலையும், அடிமை உணர்வையும், கூலி உணர்வையும், அடக்கு முறையையும், ஒடுக்கு முறையையும், தனிமனித ஆதிக்கத்தையும், சமுதாய வேறுபாடுகளையும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் ... நேரடியாகக் கடுமையாக எதிர்க்கின்றது, மறுக்கின்றது, வெறுக்கின்றது என்ற பேருண்மையை நம்மவர்கள் விளக்கி உரைக்க வேண்டும்.

அதாவது சித்தர்நெறி என்னும் **மெய்யான இந்துமதம்**தான் உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தையும், உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் விரும்புகின்றது என்பதை விளக்கிக் கூறுங்கள்.

**அன்பு**

**சி.கவிக்குமார்.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு சி.கவிக்குமார் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# கருகுலம் அமைவது பற்றிய அஞ்சல்

பொன்னேரி,
27.2.1986.

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய இனிய நண்பர் .................................... அவர்களுக்கு,

அருள்மிகு தில்லைப் பொன்மன்றிலாடுகின்ற கூத்தர்ப்பெருமான் சன்னிதானம் சித்தரடியார் ஏ.இரவி B.Sc., குருவாணைகள் பெற்று வரையும் செயல்நிலை விளக்க மடல். நலம், நலமறிய ஆவல்.

(1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே.

(2) நண்பர்களே! நமது இயக்கத்துக்கென்று தனியாக சொந்தமாக இன்றைய மதிப்புப்படி ரூபாய் 1.5 இலட்சம் மதிப்பு பெறுமான நிலம் சென்னையிலிருந்து சுமார் 17 கிலோமீட்டர் தொலைவிலுள்ள காரனோடை (கோசலையாற்றங்கரையில்) என்ற ஊரில் வாங்கப் பட்டுள்ளது. “குடியிருக்கக் கையகல நிலமாவது வேண்டும்”, “தாவாரம் இருந்தால்தான் தேவாரம் பாட வேண்டும்” என்ற பழமொழிகளின்படி நமக்கென்று நமது இயக்கத்திற்கென்று தனியாக நிலம் வாங்கியிருப்பது நமக்கும் நமது இயக்கத்திற்கும் கிடைத்த முதல் கட்ட வெற்றியே.

(3) இவ்வெற்றியை நாம் தகுந்த முறையில் பயன்படுத்துவதோடு மிக விரிவான முறையிலும், பரவலான முறையிலும் விளம்பரப் படுத்திடல் வேண்டும். எனவே, இந்நிலத்தைச் சுற்றி மதிற்சுவர் கட்டவும், நிலத்தில் கிணறு தோண்டி தோட்டங்கள் அமைக்கவும், அலுவலகப் பணிக்காகக் கட்டிடம் கட்டவும், பல்வேறு வகையான பீடங்கள் கட்டவும், ..... முடிவெடுக்க 10-3-86 அல்லது 16-3-86 ஞாயிறு அன்று அருளாட்சி அமைப்புப் பணி துவக்க விழா நடைபெற உள்ளது.

(4) மேற்கண்ட பணிகளை நிறைவு செய்ய மிகுந்த பொருட்செலவு ஆகுமென்பதால் ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள நமது இயக்க அடியான்கள், அடியாள்கள், அடியார்கள், ஆர்வலர்கள், ஆதரவாளர்கள், பற்றுளர்கள், விருப்பாளர்கள் .... அனைவரும் கணிசமான தொகையை தலைமைப் பீடத்திற்கு அனுப்புமாறு குருதேவர் சார்பிலும், நிர்வாகக் குழுவின் சார்பாகவும் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. இதற்கான பொறுப்பு அந்தந்த

வட்டார, மாவட்டத் தலைவர்கள், செயலாளர்கள், இ.ம.இ., அ.வி.தி. செயல்வீரர்கள் .... ஆகியோர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது.

(5) 10-3-86 அல்லது 16-3-86 அன்று கோசலையாற்றங்கரைக் காரணேடையில் நடைபெறும் அருளாட்சி அமைப்புப் பணி துவக்க விழாவில் அன்பு கூர்ந்து யாரும் கலந்து கொள்ள முயற்சிக்க வேண்டாம். ஏனெனில், இது ஆடம்பர ஆரவார விழாவல்ல. ஆனால், ஒவ்வொருவரும் தாங்கள் இவ்விழாவில் கலந்து கொள்ள ஆகும் செலவை பணமாக (குறைந்தது 100 ரூபாய் ஆகலாம்) தலைமைப் பீடத்திற்கு அனுப்பிடுமாறு அன்புடன் அறிவிக்கலாகிறது.

(6) இங்கு காரணேடையில் பதினெண்சித்தர்கள் குவலய குருபீடம், இராமகிருட்டிணர் மடம், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், வெட்டவெளிக் கருவறை கொண்டருளு தேவர்கள் பெரிய கோயில், ஒன்பது கோள்களின் அருட்கோட்டம், ... அமைக்க திட்டமிடப் பட்டுள்ளது. அனைவரும் இது பற்றிய அவரவரின் கருத்தோட்டங்களையும், எண்ணவோட்டங்களையும், உணர்வோட்டங்களையும், சிந்தனையோட்டங்களையும் ... தாங்கள் திரட்டிய நிதியுடன் சேர்த்தனுப்புமாறு வேண்டுகோள் விடுக்கப் படுகிறது.

(7) நண்பர்களே! நமது இயக்கம் ஆரம்பம் உறுதியாகவும், விளம்பரமானதாகவும் இருக்க வேண்டுமென்ற காரணத்தினாலேயே ரூபாய் 2500/- செலவில் Cast Iron Pipeஇல் 48 அடி உயரத்திற்கு மெய்ஞ்ஞானக் கொடி ஏற்றப்படுகிறது.

(8) அனைவரும் புரிந்தும் புரியவைத்தும் சுறுசுறுப்பாகவும், விறுவிறுப்பாகவும் செயல்படுங்கள்.

**அன்பு**

**பல்லவப் பெருமண்டலத் துணைக் குருவாணை ஓலைநாயகம் ஏ.இரவி.**

<u>பக்கக் குறிப்பு</u>:- காரணேடை நிலப் பரப்பு 34 சென்ட். கல்லூரி பிறச்சினைகள் சமாளிக்கப்பட்டு வருகின்றன. அதிகம் கவலை வேண்டாம். மூகாம்பிகை அறிக்கை...

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல். தாளின் பக்கத்தில் சித்தரடியார் திரு பெ.சௌந்தரராசன் அவர்களின் கையெழுத்தில் குறிப்பு இருந்தது.//**

# முழக்கங்கள்

(1) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! இந்துவேதம் தழைக்க உழைக்க அழைக்கிறார்!

(2) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! இந்துமதம் தழைக்க உழைக்க அழைக்கிறார்!

(3) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! அருளாட்சி அமைக்க உழைக்க அழைக்கிறார்!

(4) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! இந்துவேதம் பரப்பிட உழைக்க அழைக்கிறார்!

(5) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! இந்துமதம் பாதுகாத்திட உழைக்க அழைக்கிறார்!

(6) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களிடையேயுள்ள வேற்றுமைகளை அகற்றிட உழைக்க அழைக்கிறார்!

(7) அழைக்கிறார்! அழைக்கிறார்! அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அழைக்கிறார்! இந்துக்களிடையேயுள்ள பிரிவினைகளை அகற்றிட உழைக்க அழைக்கிறார்!

..... ..... ..... ..... .....

***//தலைமைப்பீடத்திலிருந்து 1994இல் எழுதப்பட்ட அஞ்சல் ஒன்றில் இருந்த முழக்கங்களில் சில.//***

**"இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்."**



**"... தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதிேனாராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்கள்** (கி.பி.785 - 1040) ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் (256) வாழ்ந்திட்டார். ..."

***அகழியாழ் கைமுதல் விண்தொடு கலயம்வரை ஒருமண்டல ஆளுயரம் கொண்ட கோபுரம் கண்ட கருவூரூர் குடமுழுக்குக் காண முடியாமல் போனது.***

- குருபாரம்பரியம்.

இவருக்கு அடுத்து சுமார் 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்** அவர்களின் <u>குருவாணைப்படி</u> இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.



**அம்மையப்பர்**

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://gurudevar.org
https://induism.org https://books.gurudevar.org

*Email:* indhuism@gmail.com